DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | OS 30 of 2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | பொன்மணி |
| Husband Name | : | சோமசுந்தரம் |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21.07.2025.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது கணவர் காணாமல் போனபோது எனது மகனுக்கு சுமார் 18 வயது இருக்கும். எனது மகளுக்கு 16 வயது இருக்கும். எனது கணவருக்கு உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் ஒரு மூத்த சகோதரர், அவரது பெயர் முத்து, அவர் இறந்து விட்டார். மேலும் எனது கணவருக்கு ஒரு மூத்த சகோதரி உள்ளார் அவர் பெயர் கண்ணம்மாள், அவர் தற்போது உயிருடன் தான் உள்ளார். எனது மாமனாரின் சொத்துக்களை நாங்கள் பிரித்து எழுதி கொண்டோமா என்றால் இல்லை. எனது கணவர் விஜயமங்கலம் சாலையில் உள்ள பேங்க் ஆப் பரோடா வங்கி அருகே குடியிருந்து வந்தார் என்று காட்ட எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது கணவர் அடிக்கடி கோயில் சுற்றுலா செல்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு செய்பவர் ஒரு மாதமோ, இரண்டு மாதமோ அல்லது ஒரு வருடமோ கழித்து வருவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு அவர் செல்லும் சமயங்களில் அவர் காணவில்லை என்று நடவடிக்கை எதுவும் எடுத்ததில்லை என்றால் சரிதான், அவ்வாறு

செல்லும்போது அவர் சொல்லிவிட்டு தான் செல்வார். கடந்த 2006 வருடத்திலும் எனது கணவர் காணாமல் போனபோது அவர் திருப்பி வந்துவிடுவார் என்று எண்ணத்தில் தான் அச்சமயம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 24.03.2017ல் தான் காவல் நிலையத்தில் எனது கணவர் காணாமல் போனது பற்றி புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் அதற்கு முன்னர் கொடுத்ததில்லை என்றாலும் சரிதான். ஆனால் அந்தப் புகாரின் பேரில் இந்நாள் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. நாங்கள் எனது கணவரை திருவண்ணாமலை மற்றும் சதுரகிரி முதலிய இடங்களிலும் தேடிப் பார்த்து கிடைக்கவில்லை. இந்த பகுதியில் எனது கணவர் காணாமல் போனது பற்றி துண்டு பிரச்சாரமும், நாளிதழ் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் காணாமல் போன பின்னிட்டு அவரைத் தேட எடுத்த நடவடிக்கைகள் பற்றியும், காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்ததற்கான விளக்கத்தையும் எனது வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் எனது கணவரை தேட முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.07.21 17:42:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.